**O.S.No.49/2012**

**Date:04.02.2019**

**வாதி தரப்பு சாட்சி 2 – மந்தை வீரன், த-பெ.சின்னணன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

தாவாச் சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியும், 318 ஆகும். சர்வே எண்.318–ல் உட்பிரிவு தெரியுமா என்றால் தெரியும், உட்பிரிவு 24 ஆகும். வாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்தின் மேற்கே பாதை உள்ளது என்றால் சந்து உள்ளது. தாவாச் சொத்துக்கு கிழக்கே என்ன உள்ளது என்றால் எங்கள் வீட்டிற்கும், தாவாச் சொத்திற்கும் இடையே சந்து உள்ளது. தாவாச் சொத்திற்கும் கிழக்கே மற்றும் மேற்கே உள்ளது பாதையா, சந்தா என்ற விபரம் கிராம ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்திற்கு மேற்கேதான் தாவாவுக்குரிய சுற்றுச் சுவர் உள்ளது என்றால் சரிதான். அந்த சுற்றுச் சுவர் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று தெரியுமா என்றால் சர்வே எண்.318–28ல் உள்ளது. அந்த சுற்றுச் சுவர் கட்டும் போது எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் தேர்தல் முன் விரோதம் இருப்பதாக நான் சொல்வதற்கு எந்தவிதமான வழக்கும் இல்லை என்றால் சரிதான். தாவாச் சொத்து மற்றும் அதன் அமைவிடம் பற்றி எனக்குத் தெரியாது என்றும், நான் நீதிமன்றத்திற்கு தவறான தகவல் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

(மேற்கண்ட குறுக்கு விசாரணையை 1 முதல் முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. )